பொருளியல்

பணத்தின் நிரம்பலைப் பகுப்பாய்வு செய்து கூறுவர்.



e தக்சலாவ கல்விக்கூடம் ™
The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa

தேர்ச்சி மட்டம் 7.3

பணத்தின் நிரம்பல். (Money Supply)

குறிப்பிட்ட காலப்பகுதியில் பொதுமக்களிடையே புழக்கத்திலுள்ள மொத்த பண அளவு பணநிரம்பல் எனப்படும்.
பணநிரம்பல் ஒரு இருப்பு மாறியாகும்.



ஒடுங்கிய பணநிரம்பல்

குறிப்பிட்ட காலப்பகுதியில் அரச மற்றும் வங்கி தவிர்ந்த ஏனைய பொதுமக்களிடமுள்ள தாள் உலோக நாணயங்களையும் பொதுமக்களின் பெயரில் வணிக வங்கிகளிடமுள்ள கேள்வி வைப்புக்களும் ஒடுங்கிய பண நிரம்பல் ஆகும்.

$$M_1=C_P+DD_P$$

தொகுப்பு :- திரு.இ.பிரபாகரன்,ஆசிரியர்-பொருளியல் (யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)
கணணி வடிவமைப்பு :- திரு.S.அஜந்தன் (கணணி வள நிலையம், வடமராட்சி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

விரிந்த பணநிரம்பல்

குறிப்பிட்ட காலப்பகுதியில் அரசு மற்றும் வங்கி தவிர்ந்த ஏனைய பொதுமக்கள் வசமுள்ள தாள் உலோக நாணயங்கள் பொதுமக்களின் பெயரில் வணிக வங்கிகளிலுள்ள கேள்வி சேமிப்பு மற்றும் தவணை வைப்புக்களும் விரிந்த பணநிரம்பல் எனப்படுகின்றது.

$$M_2=M_1+TSD_{CB}$$

ஒன்று திரண்ட விரிந்த பண நிரம்பல்

குறித்த காலப்பகுதியில் அரசு மற்றும் வங்கி தவர்ந்த ஏனைய பொதுமக்களிடமுள்ள தாள் உலோக நாணயங்கள் பொதுமக்களின் பெயரில் வணிக வங்கிகளிலுள்ள கேள்வி சேமிப்பு மற்றும் தவணை வைப்புக்கள் மற்றும் வதியாதோர் நாணயக்கணக்கிலுள்ள தவணை சேமிப்பு வைப்புக்கள் வெளிநாட்டு நாணய வங்கிப் பிரிவிலுள்ள வதிவுள்ளோர் வைப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கியது. ஒன்று திரட்டப்பட்ட விரிந்த பண நிரம்பல் ஆகும்.

$$M_2b=M_2+TSD_{NRFC}+RD_{FCBU}$$

மிக விரிந்த பண நிரம்பல்

குறித்த காலப்பகுதியில் அரசு மற்றும் வங்கிகள் தவிர்ந்த ஏனைய பொதுமக்களிடமுள்ள தாள் உலோக நாணயங்கள், பொதுமக்களின் பெயரில் வணிக வங்கிகளிலுள்ள கேள்வி மற்றும் தவணை சேமிப்பு வைப்புக்கள், வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கிலுள்ள வைப்புக்கள் மற்றும் வெளிநாட்டு நாணயவங்கிப் பிரிவிலுள்ள வதிவுள்ளோர் வைப்புக்கள் மற்றும் உரிமம் பெற்ற விசேட வங்கிகள், நிதிகட்கம்பனிகளிலுள்ள தவணை சேமிப்பு வைப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கியது மிகவிரிந்த பணநிரம்பலாகும்.

$$M_4=M_2b+RD_{LSB}+RD_{FC}$$

தொகுப்பு :- திரு.இ.பிரபாகரன்,ஆசிரியர்-பொருளியல் (யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)
கணணி வடிவமைப்பு :- திரு.S.அஜந்தன் (கணணி வள நிலையம், வடமராட்சி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk





தொகுப்பு :- திரு.இ.பிரபாகரன்,ஆசிரியர்-பொருளியல் (யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)
கணணி வடிவமைப்பு :- திரு.S.அஜந்தன் (கணணி வள நிலையம், வடமராட்சி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

நாணயத்தளம்/உயர்வலுப்பணம்/ ஒதுக்குப்பணம்

பணநிரம்பலுக்கு அடிப்படையாகவுள்ள பணவியல் சொத்துக்கள் உயர்வலுப்பணம் எனப்படும்.



Note:- உயர்வலுப் பணத்தின் உள்ளடங்கலில் ஒன்றாக மத்திய வங்கியில் உள்ள அரச முகவர்களின் வைப்புக்களும் உள்ளடக்கடலாம்

உயர்வலுப்பணத்தினைத் தீர்மானிக்கும் காரணிகள்

Note:- மேலே பணநிரம்பலைத் தீர்மானிக்கும் காரணிகளில் உயர்வலுப்பணம் என்பதனுடன் கூறப்பட்டுள்ளது.

தொகுப்பு :- திரு.இ.பிரபாகரன்,ஆசிரியர்-பொருளியல் (யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)
கணணி வடிவமைப்பு :- திரு.S.அஜந்தன் (கணணி வள நிலையம், வடமராட்சி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

பணப்பெருக்கி (Km)

பணநிரம்பலுக்கும் உயர்வலுப் பணத்திற்கும் இடையிலான விகிதம் பணப்பெருக்கி எனப்படுகிறது.

.

$$\text{பணப்பெருக்கி}(Km) = \frac{\text{பண நிரம்பல்}(M)}{\text{உயர்வலுப்பணம்}(H)}$$

பணநிரம்பல் = பணப்பெருக்கி(Km) X உயர்வலுப்பணம்(H)

Note:- மாணவர்கள் தமக்கு வழங்கப்படும் தரவுகளிற்கேற்றவாறு எந்தப் பண நிரம்பல் என்பதனைத் தீர்மானித்துக் கொள்ளலாம்.

உதாரணமாக M_1 பணநிரம்பலாயின் பணப்பெருக்கி

$$Km = \frac{M_1}{H}$$



தொகுப்பு :- திரு.இ.பிரபாகரன்,ஆசிரியர்-பொருளியல் (யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)
கணணி வடிவமைப்பு :- திரு.S.அஜந்தன் (கணணி வள நிலையம், வடமராட்சி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

உதாரணம் :- கற்பனையான பொருளாதாரமொன்றின் பணநிரம்பல் 3000 மில்லியன் எனவும் இதில் 500 மில்லியன் பொதுமக்களின் கையிலுள்ள பணமாகவும் மிகுதி வங்கி வைப்புக்களாகவும் உள்ளன. காசொதுக்கு வீதம் 10% ஆகும். வங்கிகள் மிகை-யொதுக்கு எதனையும் கொண்டிருக்கவில்லை. எனின்

உயர்வலுப் பணத்தின் அளவு:-

மேற்படி உதாரணத்தின்படி உயர்வலுப் பணத்தின் உள்ளடங்கலாவன

1) பொதுமக்கள் வசமுள்ள நாணயம் - 500 மில்லியன்
2) மத்திய வங்கியிலுள்ள வணிகவங்கியின் வைப்பு(2500 X 10/100) - 250 மில்லியன்

உயர்வலுப்பணம் - 750 மில்லியன்

பணப்பெருக்கக்குணகம் :-

$$K_m = M/H$$
$$K_m = 3000/750$$
$$K_m = 4$$

தொகுப்பு :- திரு.இ.பிரபாகரன்,ஆசிரியர்-பொருளியல் (யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)
கணணி வடிவமைப்பு :- திரு.S.அஜந்தன் (கணணி வள நிலையம், வடமராட்சி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk